12th March 1966]

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படியென்றால் எப்பொழுது அந்த உத்தேசம் அமலாக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : எப்பொழுது மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தைக் கேட்டு, அவர்களுடைய அபிப்பிராயத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கின்றார்களோ, நடத்தும்படி சொல்லுகிறார்களோ, அப்பொழுது எடுத்துக் கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படி அமைக்கப்படுகிற போலீஸ் பிரிவு நம்முடைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டதாக விளங்குமா அல்லது இந்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டதாக விளங்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அநேகமாக நம்முடைய மேற்பார்வையிலேதான் இருக்கும். அந்தந்த இண்டஸ்ட்ரீஸ் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள்

*263 **கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அடகு வைத்திருப்பவர்களின் தங்க நகைகளை மீட்டு அவற்றை நாட்டின் பாதுகாப்புக்காகப் பத்திரப்படுத்திப் பயன் படுத்துவது பற்றி அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : The proposal was examined and dropped by the Government.

திரு. இராம. அரங்கண்ணல் : அடகு வைத்திருக்கிறவர்களுடைய தங்க நகைகளை மீட்டு அவற்றை நாட்டின் பாதுகாப்புக்காக பத்திரப் படுத்த வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தி காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் அவர்கள் பல இடங்களில் பேசியிருக்கிறார்கள். அந்தக் கட்சிக் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கட்சியினுடைய கொள்கை பரிசீலனை செய்யப்பட்டதா, இல்லையா என்பது பிரச்னை இல்லை. இது போன்ற ஒரு கருத்து இருந்தது. அதைப் பரிசீலனை செய்ததிலே இப்பொழுது இருக்கக்கூடிய 1943-ம் ஆண்டு மெட்ராஸ் பான் ப்ரோகர்ஸ் சட்டப்படி அடகு வைத்து அந்த நகைகள் மூழ்கிப் போகக்கூடிய காலத்தில் அவற்றை ஏலம் போட வேண்டுமே தவிர வேறு வழி இல்லை என்பதை அரசாங்கம் உணர்ந்த காரணத்தினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : அடகு வைத்திருப்பவர்களுடைய நகைகள் மூழ்கி விட்டால் தனிப்பட்ட ஒருவருக்கு அந்த நகைகள் சொந்தமாகிவிடுகிறது. அப்படியில்லாமல் அடகு வைத்திருப்பவர்களுக்கு நன்மை செய்யும் விதத்திலும், அந்தத் தங்க நகைகளை

முதலீடு செய்கின்ற விதத்திலும் சட்ட விதிகளைத் திருத்தி அரசாங்கமே அந்த நகைகளை எடுத்துக் கொள்ளுவதற்கு ஏதாவது முயற்சி செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : யாருக்கும் சொந்தமாகிவிடு கிறது என்பது அல்ல. இப்பொழுது இருக்கக்கூடிய சட்டப்படி அந்த நகைகளை ஏலம் போடவேண்டும். அம்மாதிரி ஆக்ஷன் போட்டால் தான் அதில் இருக்கக்கூடிய தங்கத்திற்குக் கிடைக்கக் கூடிய விலையை விட அந்தப் பொருளுக்கு அதிகமான விலை கிடைக்கும். அந்த நகைளை தங்கமாக மாற்றி ஏலம் போட்டால் அடகு வைத்திருப்பவர்களுக்கு நஷ்டம் வரக்கூடும். ஆகவே, அடகு வைத்திருப்பவர்களுக்கு நஷ்டம் வரக் கூடாது என்ற கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தங்கமாக மாற்றி முதலீடு செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தங்க நகைகளை அப்படியே இருக்கிற விதத்திலேயே கொடுத்தால் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவைகள் கொடுத்த மாதிரியே திருப்பிக் கொடுக்கப்படும் என்று பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டில் எது சரி ?

கனம் திரு. வெ. ராமையா : நகைகளாகக் கொடுத்தால், அதே நகைகள் திருப்பிக் கொடுக்கப்படும் என்பது அல்ல. அவைகளில் இருக்கக்கூடிய தங்கத்தைத் தான் திருப்பிக் கொடுப் பார்கள்.

அக்கினி ஆற்றுப் பாசனம்

*264 கேள்வி—**திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அக்கினி ஆற்றுப் பாசனத்தை இன்னும் விஸ்தரிக்கும் செயற் குறிப்புகள் ஏதேனும் பரிசீலனையில் உள்ளனவா?

THE HON. SRI V. RAMAIAH : No Sir.

திரு. பி. முருகையன் : அக்கினியாறு திட்டத்தில் இடையிலே அந்த ஆறு வருகிற பகுதியிலே சில குளங்கள் விட்டுப் போயிருக் கின்றன. அந்தக் குளங்களுக்குத் தண்ணீர் கொடுப்பது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : புதியதாக விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். இல்லை என்று பதில் சொன்னேன். இப்பொழுது இந்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக இருக்கக்கூடிய காரணத்தினால், உபரித் தண்ணீரை விடப்பட்ட குளங்கள், கண்மாய்கள், ஏரிகளுக்குக் கொடுக்க முடியுமா என்பதுபற்றி ஸ்தலத்தில் இருக்கக்கூடிய என்ஜினியர்கள் பரிசீலனை செய்கிறார்கள்.